දුරකථන
தொலைபேசி
Telephones
011-2136600
011-2136650

ලේකම්
செயலாளர்
Secretary
011-2136602

ෆැක්ස්
தொலைநகல்
Fax
011-2876169
011-2876181

විද්‍යුත් තැපෑල
மின் - அஞ்சல்
E - mail
info@psc.gov.lk

වෙබ් අඩවිය
இணையத்தளம்
Website
www.psc.gov.lk

මගේ අංකය
எனது இல.
My No.
PSC/APP/16/4/27/2022

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date
2023 ஓகத்து மாதம் திகதி

රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය
அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்
OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION

අංක 1200/9, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල
இல. 1200/9, இரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை
No. 1200/9, Rajamalwatta Road, Battaramulla

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்கள்,

**பதிற்கடமை அடிப்படையிலான நியமனத்தின் செல்லுபடியாகும் காலம்**

பதவிகளுக்கு நியமிப்புச் செய்வதற்குத் தகைமையுடைய உத்தியோகத்தர்கள் இருந்த போதிலும், வழக்கத்திற்கு மாறாக நீண்ட காலத்திற்குப் பதவிகளின் பதிற்கடமையாற்ற உத்தியோகத்தர்களை நியமிக்கும் சந்தர்ப்பங்கள் தொடர்ச்சியாக அதிகரித்திருப்பதை அரசாங்க சேவை ஆணைக்குழு அவதானித்துள்ளது.

02. பதிற்கடமை அடிப்படையிலான நியமனங்களின் செல்லுபடியாகும் காலத்தை மீண்டும் மீண்டும் நீடிப்பதன் மூலம் உத்தியோகத்தரின் நிரந்தரப் பதவி மற்றும் அவர் பதிற்கடமையாற்றும் பதவிக்கிடையே பகிர்ந்தளிப்பதற்குப் போதிய பணிகள் இல்லை என்பதும், அதற்கமைய அமைச்சின்/திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் குறித்த இரண்டு பதவிகளையும் தொடர்ந்தும் பேணுவது குறித்து உடனடியாக மீளாய்வு செய்யும் தேவை காணப்படுகின்றது என்பதும் புலனாகின்றன.

03. அதற்கமைய, ஏற்புடைய பதவிகளுக்கு நியமிப்பதற்குத் தகைமையுடைய உத்தியோகத்தர்கள் காணப்படும் சந்தர்ப்பங்களில், அதற்கு ஏதேனும் சட்ட ரீதியான தடை (நீதிமன்றத்தின் இடைக்காலத் தடை போன்ற) இல்லையெனில், ஏற்புடைய நியமனங்களின் நிருவாக அதிகாரிகள் வெற்றிடமாகவுள்ள பதவிகளின் பதிற்கடமையாற்றுவதற்காக உத்தியோகத்தர்களை நியமிக்கையில்/நியமிப்பதற்குப் பரிந்துரைக்கையில் நியமனங்களின் செல்லுபடியாகும் காலமானது கட்டாயமாக 1997.02.03 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 06/97 இன் ஏற்பாடுகளுக்கு அமைவானது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது என்பதை இத்தால் அறியத் தருகிறேன்.

டப்ளியூ.எச்.எம்.எம்.சீ.கே. தயாரத்ன
செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழு.